بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/01/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**உஹுது போரின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய எடுத்துரைப்பு மற்றும் உலகப் போரில் இருந்து தப்புவதற்காக துஆவிற்கான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் போரில் ஏற்பட்ட காயங்களைப் பற்றிய விளக்கத்தில் சில அறிவிப்புகள் இவ்வாறு உள்ளன:- ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களின் அறிவிப்புக்கு ஏற்ப அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் நபி {(ஸல்)} அல்லாஹ்வின் வழியில் கொன்ற நபரின்மீது, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கோபம் கடுமையாகி விடுகிறது. அல்லாஹ்வின் தூதரின் {(ஸல்)} முகத்தை இரத்தத்தில் நனைய வைத்த சமுதாயத்தின்மீது அல்லாஹ்வின் கோபம் கடுமையாகி விடுகிறது.

தபரானியில் அறிவிப்பு வருகிறது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்ற போது இவ்வாறு கூறினார்கள்: ரஸூலுல்லாஹ் {(ஸல்) அவர்களின்} அருளுக்குரிய முகத்தைக் காயப்படுத்திய சமுதாயத்தின் மீது அல்லாஹ்வின் கோபம் மிகவும் கடுமையாகி விடுகிறது. பிறகு, சிறிது நேரம் கழித்து கூறினார்கள்: அல்லாஹ்வே! எனது சமுதாயத்தை மன்னித்து விடுவாயாக! ஏனென்றால், அது அறிவீனமானது. எனவே, அல்லாஹ்வின் பண்பில் முழுமையாக திளைத்திருந்த ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கருணை, அன்னார் காயமுற்று, இரத்தம் வடிந்து கொண்டிருந்த போதும் மேலோங்கியது. மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீண்டும் இவ்வாறு துஆ செய்தார்கள்:

அல்லாஹ்வே! இவர்கள் அறியாமையினால், மடமையினால் இந்த அநீதியை இழைக்கிறார்கள். அவர்களை மன்னித்து விடுவாயாக! அவர்களுடைய தவறுகளின் காரணமாக அவர்கள் மீது தண்டனை இறக்கி விடாதிருப்பாயாக! اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ என்னே ஒரு பரிவு மற்றும் கருணையின் காட்சி!

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் இப்பொழுதும் நபி (ஸல்) அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பது போல் இருக்கிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் நபிமார்களில் ஒரு நபியின்

நிலையை எடுத்துரைக்கிறார்கள். அவரை அவரது சமுதாயம் அடித்து அடித்து இரத்தம் வழிய வைத்து விட்டது.

(பிறகு, அன்னார்) தமது பொன் முகத்திலிருந்து இரத்ததைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும், இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்: அல்லாஹ்வே! எனது சமுதாயத்தை மன்னித்து விடுவாயாக! ஏனெனில் அவர்கள் அறிவதில்லை.

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களும் சீரத் காத்தமுன்னபிய்யீனில் விளக்கம் எழுதியுள்ளார்கள்: குன்றை சென்றடைந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உதவியால் தம்முடைய காயங்களைக் கழுவினார்கள். மேலும், அன்னாருடைய முகத்தில் குத்தி இருந்து விட்ட இரண்டு சங்கிலிகளை (இரும்புத் துண்டுகளை) அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் மிகவும் சிரமப்பட்டு தம்முடைய பற்களால் இழுத்து இழுத்து வெளியே எடுத்தார்கள். எதுவரை என்றால், இந்த முயற்சியில் அவர்களுடைய இரண்டு பற்களும் உடைந்து விட்டிருந்தன. அப்பொழுது ஹுஸூர் (ஸல்) அவர்களின் காயங்களில் இருந்து மிக அதிகமாக இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த இரத்தத்தைப் பார்த்து வருத்தத்துடன் இவ்வாறு கூறி வந்தார்கள்:

كَيْفَ يُفْلِحُ قَوْمٌ خَضَبُوْا وَجْهَ نَبِيِّهِمْ بِالدَّمِ وَهُوَ يَدْعُوْهُمْ اِلٰى رَبِّهِمْ

அதாவது, அவர்களை (அந்த சமுதாயத்தை) அவர்களின் இறைவன் பால் அழைக்கிறார் என்பதற்காக, தன்னுடைய நபியின் முகத்தில் அவரது இரத்தத்தை வழியச் செய்து விட்ட சமுதாயம் எப்படி ஈடேற்றம் அடையும்?

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிறிது நேரத்திற்கு அமைதியாகி விட்டார்கள். பிறகு, கூறினார்கள்:

اَللّٰهُمَّ اغْفِرْ لِقَوْمِيْ فَاِنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

அதாவது, என் அல்லாஹ்வே! நீ எனது சமுதாயத்தை மன்னித்து விடுவாயாக! ஏனெனில், அறிவீனம் மற்றும் அறியாமையினால் இவர்களிடம் இந்தத் தவறு ஏற்பட்டு விட்டது.

அறிவிப்பு வருகிறது, அந்தத் தருணத்திலேயே இந்தத் திருக்குர்ஆன் வசனம் இறங்கியது:

لَيْسَ لَكَ مِنَ الْاَمْرِ شَيْءٌ

அதாவது, தண்டனை மற்றும் மன்னிக்கும் விவகாரம் அல்லாஹ்வின் கையில் உள்ளது. உமக்கு இதில் எத்தொடர்பும் இல்லை. அல்லாஹ் தான் நாடுவரை மன்னிப்பான். தான் நாடுபவருக்குத் தண்டனை வழங்குவான்.

ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஹரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி திகிலூட்டக்கூடிய செய்திகளைக் கேள்விப்பட்டு மதீனாவிலிருந்து புறப்பட்டு வந்திருந்தார்கள். அவர்களும் சிறிது நேரம் கழித்து

உஹுது களத்தை அடைந்து விட்டார்கள். வந்த உடனேயே ஹுஸூர் (ஸல்) அவர்களின் காயங்களைக் கழுவ ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், எப்படியும் இரத்தம் நின்றபாடில்லை. கடைசியில், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் பாயின் ஒரு துண்டை எரித்து அதன் சாம்பலை ஹுஸூர் (ஸல்) அவர்களுடைய காயத்தின் மீது கட்டி விட்டார்கள். அப்பொழுதுதான் ஒருவழியாக இரத்தம் நின்றது. மற்ற பெண்மணிகளும் இந்த சந்தர்ப்பத்தில் காயமுற்றிருந்த சஹாபாவுக்குத் தொண்டாற்றி நற்கூலி பெற்றார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: உஹுது போரின் சந்தர்ப்பத்தில் ஒரு கல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தலைக்கவசத்தில் பட்டது. அதன் ஆணி அன்னாருடைய தலையில் நுழைந்து விட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் மயக்கமடைந்து, அன்னாருக்கு அக்கம் பக்கம் போரிட்டவாறு ஷஹீது ஆகி விட்டிருந்த சஹாபாவின் உடல்கள் மீது விழுந்தார்கள். இதற்குப் பிறகு, இன்னும் சில சஹாபாவின் உடல்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களின் தூய தேகத்தின் மீது சென்று விழுந்தன.

மக்கள் ஹுஸூர் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டதாகக் கருதினார்கள். ஆனால், ஹுஸூர் (ஸல்) அவர்கள் பள்ளத்திலிருந்து வெளியே தூக்கப்பட்ட போது அன்னாருக்கு சுய நினைவு வந்தது. அப்பொழுது ஹுஸூர் (ஸல்) அவர்கள் எதிரி தம்மைக் காயப்படுத்தி விட்டான் என்றோ, தம்முடைய பற்களை உடைத்து விட்டான் என்றோ, தம்முடைய அன்பர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களை ஷஹீது ஆக்கி விட்டான் என்றோ நினைக்கவே இல்லை. அதற்கு மாறாக, ஹுஸூர் (ஸல்) அவர்கள் சுய நினைவுக்கு வந்ததுமே இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ اغْفِرْ لِقَوْمِيْ فَاِنَّهُمْ لَا يَعْلَمُوْنَ

அதாவது, என் இறைவா! இந்த மக்களால் எனது தகுதியை அடையாளம் காண முடியவில்லை. எனவே, நீ அவர்களை மன்னித்து விடுவாயாக! இவர்கள் செய்த பாவங்களை மன்னித்து விடுவாயாக!

உஹுது போரில் வானவர்கள் வருகை தந்து போர் புரிந்தது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் சஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் உஹுது நாளன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வலம், இடம் இருவரைக் கண்டேன். அவர்கள் மீது வெண்ணிற ஆடை இருந்தது. மிகக் கடுமையாகப் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். நான் அவ்விருவரையும் அதற்கு முன்னரும் கண்டதில்லை; அதற்குப் பிறகும் கண்டதில்லை. அதாவது, ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மீக்காயீல் (அலை) அவர்கள் ஆவார்கள்.

அல்லாமா பைஹக்கீ அவர்கள் உர்வாவிடமிருந்து அறிவித்துள்ளார்கள்: எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களிடம், பொறுமை காத்து, இறையச்சத்தை மேற்கொண்டால் தொடர்ந்து வரும் ஐயாயிரம் வானவர்கள் மூலம் அவர்களுக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்திருந்தான். எல்லாம் வல்ல அல்லாஹ் அவ்வாறே

செய்தான். ஆனால், அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு மாறு செய்து, அணிகளை விட்டு விட்டதும், மேலும், வில்வீரர்கள் தங்களுடைய இடங்களை விட்டு விட்டுவதற்கான எண்ணம் கொண்டதும், அவர்களிடமிருந்து வானவர்களின் உதவியை எடுத்துக் கொண்டான். மேலும், எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்:

பொருள்: நீங்கள் அவனுடைய கட்டளையால் அவர்களை வேரறுத்துக் கொண்டிருந்த போது, நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் தனது வாக்குறுதியை உண்மையாக்கிக் காட்டினான்.

ஹஸ்ரத் முஹம்மது பின் ஃஃசாபித் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுது நாளன்று, 'முஸ்அபே நீர் முன்னேக்கிச் செல்வீராக' என்று கூறினார்கள். அப்பொழுது அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃஃப் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! முஸ்அப் ஷஹீது ஆக்கப்பட்டு விடவில்லையா?' என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆமாம்! ஆனால், ஒரு வானவர் அவருக்குப் பிரதிநிதியாக ஆகியுள்ளார். அவருடைய பெயர் அ(ந்த வான)வருக்கு வழங்கப்பட்டு விட்டது.

அல்லாமா இப்னு அஸாகர் அவர்கள் ஹஸ்ரத் சஃஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: உஹுது நாளன்று நான் என்னை அம்பு எய்துவதாகக் கண்டேன். மேலும், அந்த அம்புகளை என்னிடம் வெண்ணிற ஆடை அணிந்திருந்த அழகான மனிதர் திரும்பக் கொண்டு வந்து கொ(டுத்துக் கொ)ண்டிருந்தார். நான் அவரை அறிந்திருக்கவில்லை. எதுவரை என்றால், அதற்குப் பிறகு அவர் வானவராக இருந்தார் என்று நான் எண்ணி வந்தேன்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் தமது ஒரு குத்பாவில் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துக் கூறினார்கள்:- சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) கூறுகிறார்கள்: பத்ர் யுத்தத்தில் வானவர்கள் காணப்பட்ட போது, அவர்களுடைய தலைகள் மீது கருப்புத் தலைப்பாகைகள் இருந்தன. அவர்களுக்கு ஒரு சீருடை இருந்தது. அறிவிப்புகள் ஒன்று திரண்டதும் (சஹாபா பெருமக்களான) அவர்கள் வியப்புக்குள்ளானார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் مُسَوِّمِيْنَ என்ற சொற்களுக்கு விளக்கம் அளித்திருந்தது போன்றே நிகழ்ந்தது.

அதே போன்று உஹுது போரில் தென்பட்ட வானவர்களுடைய தலைகள் மீது அடையாளமாக செந்நிற தலைப்பாகைகள் இருந்தன. செந்நிறத்தில் சிறிது துன்பத்தின் செய்தியும் அடங்கியிருந்தது. ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காயங்கள் காரணமாக எவ்வளவு துயரம் சஹாபா பெருமக்களுக்கு உஹுது போரில் ஏற்பட்டதோ அது போன்ற துயரம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்நாள் முழுவதும் சஹாபாவுக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

ஒரு வேதனைக்குப் பிறகு இன்னொரு வேதனை என அவர்களுக்கு செய்தி கிடைத்தது. அவர்கள் வேதனைகளால் நிம்மதியிழந்து போனார்கள். ஆக, அந்தப் போரில் வானவர்களின் அடையாளத்துக்காகவும் எத்தகைய ஒரு நிறம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது என்றால், அதில் வேதனை, இரத்தம் மற்றும் துயரத்தின் அம்சம் கலந்திருந்தது.

சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய உறுதியான நிலைத்து நிற்றல் மற்றும் உயிரை அர்ப்பணித்தலுக்கான சம்பவங்களும் பல இருக்கின்றன. அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதில் எவ்வாறு தம்முடைய உயிர்களை அர்ப்பணம் செய்துள்ளார்கள்! ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எழுதுகிறார்கள்: அப்பொழுது மிகவும் பயங்கரமான சண்டை நடந்து கொண்டிருந்தது. முஸ்லிம்களுக்கு ஒரு கடுமையான துயரம் மிகுந்த, சோதனைக்குரிய நேரமாக இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீதான (தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு பல சஹாபா துணிவிழந்து விட்டிருந்தார்கள். மேலும், ஆயுதங்களை வீசி விட்டு போர்க்களத்தை விட்டு ஒரு பக்கம் ஆகி (இருந்து) விட்டார்கள். அவர்களிலேயே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஆக, இந்த மக்கள் இவ்வாறே போர்க்களத்திலிருந்து ஒருபுறம் அமர்ந்திருந்த போது, மேலிருந்து ஒரு சஹாபி அனஸ் பின் நஸ்ர் அன்ஸாரீ (ரலி) அவர்கள் வந்து விட்டார்கள். அவர்களைப் பார்த்து, 'நீங்கள் எல்லாம் இங்கு என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகி விட்டார்கள். இப்பொழுது போரிட்டு என்ன பலன்?' என்று பதிலளித்தார்கள்.

அதற்கு அனஸ் (ரலி) அவர்கள், 'இதுதான் போரிடுவதற்கான தருணம் ஆகும். அப்போதுதான் எந்த மரணத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அடைந்தார்களோ அது நமக்கும் கிடைக்கப்பெறும். அது மட்டுமின்றி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பிறகு உயிர் வாழ்வதிலும் என்ன இன்பம் இருக்கிறது?' என்று கூறினார்கள்.

பிறகு, அவர்களுக்கு முன்னால் ஹஸ்ரத் சஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் வந்தார்கள். அப்பொழுது (அனஸ்) அவர்கள் கூறினார்கள்: சஃதே! எனக்கு மலைத்தொடரிலிருந்து சொர்க்கத்தின் நறுமணம் வருகிறது. இதைக் கூறியவாறு, ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் எதிரிகளின் அணிகளுக்குள் நுழைந்து விட்டார்கள். மேலும், போரிட்டாறு ஷஹீது ஆகி விட்டார்கள். போருக்குப் பிறகு பார்க்கப்பட்ட போது, அவர்களுடைய உடலில் 80 க்கும் மேற்பட்ட காயங்கள் இருந்தன. இது யாருடைய சடலம் என்று எவரும் அடையாளம் காண முடியாமல் இருந்தது. கடைசியில் அவர்களின் சகோதரி அவர்களது விரலைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அவர்களுடைய ஷஹாதத் பற்றி குறிப்பிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-

உஹுது போரில் எல்லாம் வல்ல இறைவன் மீண்டும் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், **'**மாலிக் பின் அனஸ் அவர்களைத் தேடுங்கள்**'** என்று கூறினார்கள். ஆக, அவர்களுடைய சகோதரி ஓரிடத்தில் சடலத்தின் துண்டுகளிலிருந்து ஒரு விரலை வைத்து அடையாளம் கண்டு கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார்கள். இதுதான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசமாக இருந்தது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்தக் குறிப்பு தொடர்கிறது. இப்பொழுது இனியும் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

துஆக்களில் இன்றைய நாள்களில் ஏமனின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் இன்றைய நாள்களில் பெரும் சிரமங்களில் சிக்கியுள்ளார்கள். இவ்வாறே, முஸ்லிம் உம்மத்துக்காக துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களிடமும் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவானாக! அறிவையும் புரிதலையும் வழங்குவானாக! உலகத்தின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். மிக வேகமாக போரை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் கருணை புரிவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில், சிராலியோனின் துணை அமீர் ஹாஃபிஸ் டாக்டர் அப்துல் ஹமீது காமாங்கா சாஹிப் மற்றும் இயக்கத்தின் முரப்பி சௌத்ரீ ரஷீதுத்தீன் சாஹிப் அவர்களின் துணைவியார் தாஹிரா நஸீர் பேகம் சாஹிபா ஆகிய இரண்டு மர்ஹூம்களின் நற்பண்புகளை எடுத்துரைத்தார்கள். பிறகு, ஜனாஸா காயிப் தொழ வைப்பதற்கான அறிவிப்பு செய்தார்கள். மேலும், இவ்வாறு துஆ செய்தார்கள்:*

எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய பிள்ளைகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)